பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 09 சனிக்கிழமை [26-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 326

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மேற்பார்வையில்

# உணவுப் பொருள் வாகன அணி

# ஆனையிறவு தடை முகாம் ஊடாக!

## இரண்டொரு தினங்களில் வரும் யாழ். அரச அதிபருக்குத் தகவல்

யாழ்ப்பாணம், அக். 26

உணவுப் பொருள்களுடன் வாகன அணி ஒன்று, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில், ஆனையிறவு தடை முகாம் பகுதி ஊடாக இன்னும் இரண்டொரு தினங்களில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவைகள் அமைச்சு இது பற்றிய தகவலை யாழ். அரச அதிபருக்கு நேற்றுத் தெரியப்படுத்தியதாக அறியவருகிறது.

வாகன அணியில் ஏற்றப்படும் பொருள்களைக் கொழும்பில் பொறுப்பேற்று, வாகன அணியுடன் சேர்ந்து வருவதற்காக யாழ். செயலக அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்கும்படியும் —

புனர்வாழ்வு அமைச்சு நேற்று யாழ். அரச அதிபருக்கு அனுப்பிய வானொலிச் செய்தியில் கேட்டுக் கொண்டது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உணவுப் பங்கீட்டுத் திட்டத்தை அமுலாக்க மக்கள் உதவி தேவை

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 26

அத்தியாவசிய உணவுப் பொருள் புதிய பங்கீட்டுத் திட்டத்தைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர்.

இது தொடர்பாக முன்னணியினர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவுக்கு, விவசாயிகளும் சில தகவல்களை வெளியிட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

**மக்கள் கஷ்டம்**

இன்றைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்திச் சில வர்த்தகர்கள் பொருள்களைப் பதுக்கினர். அதன் காரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் பெரும் கஷ்டம் அடைந்துள்ளனர். அதிக பணம் கொடுத்துப் பொருள்களை வாங்குவதற்கு அவர்களிடம் பணம் இல்லை. அதனால் அவர்கள் பட்டினிச் சாவைக் கூட எதிர்நோக்க நேரிடலாம். இதனைத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மொத்த விற்பனையாளர்களுக்கு விடுதலைப் புலிகளின் அறிவித்தல்

யாழ்ப்பாணம், அக். 26

பொதுமக்களுக்கான உணவு விநியோகத்தைச் சீர்செய்வது தொடர்பாக அரிசி ஆலை உரிமையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் ஆகியோருக்கு பொது அறிவித்தல் ஒன்றை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வெளியிட்டிருக்கிறது.

அத்தியாவசிய பொருள்களான அரிசி, மா, சீனி, தேயிலை, பால்மா, தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய், பருப்பு வகைகள் ஆகியவற்றை வைத்திருக்கும் வர்த்தகர்கள் அவை பற்றிய விவரப் பட்டியலை இரு பிரதிகளில் தயார் செய்து தமது உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்படி விவரத்தை அறிவிக்காமல் வைத்திருக்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கல் பொருள்களாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

உங்கள் கையிருப்புகளை முன்கூட்டியே தெரியப்படுத்தி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள் வாகனங்களைச் சோதனையிடுவர்

யாழ்ப்பாணம், அக். 26

அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் சகல வாகனங்களையும் தமிழீழ காவல் துறையின் உறுப்பினர்கள் மறித்துச் சோதனையிடுவர் என்றும், அதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தத்தமது உதவி அரசாங்க அதிபரின் அனுமதிப் பத்திரத்துடனேயே அத்தியாவசியப் பொருள்களை வாகனங்களில் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். அனுமதிப் பத்திரமின்றி அத்தியாவசியப் பொருள்களை எந்த வாகனச் சொந்தக்காரரும் ஏற்றிச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். [உ-8]

## குறிகாட்டுவானில் கடற் கண்ணி!

கொழும்பு, அக். 26

குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் 14 கடற் கண்ணி வெடிகளை கடற்படையினர் கடந்த புதன்கிழமை கண்டு பிடித்துச் செயலிழக்கச் செய்தனர் என்று ஸ்ரீலங்காப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-த)

## பலாலி ராணுவம் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 26

பலாலி முகாமில் இருந்து நேற்று மாலை 6 மணியளவில் கட்டுவன், தெல்லிப்பளை, குரும்பசிட்டிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இடையிடையே கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இதேவேளை காரைநகர், கடற்பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் பொன்னாலை குடியிருப்புப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். [ஒ-15]

## சபாநாயகருக்கு புதிய பட்டம்!

யாழ்ப்பாணம், அக். 26

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு ''லஞ்சப் பேர்வழி'' என்று தான் பட்டம் சூட்டியிருப்பதாக எதிர்க்கட்சி எம். பியான வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

இனி தான் சபாநாயகரைக் குறிப்பிடும் போது ''லஞ்சப் பேர்வழி முகம்மது'' என்றே அழைக்கப்போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். [உ-த]

## 2 சிப்பாய்கள் காயம்

கொழும்பு, அக். 26

பூநகரிப் பகுதியில் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 26

மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் கடந்த மாதம் 14 ஆம் திகதி நடந்த மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை சித்தார்த்தன் (ஸ்ரீகந்தராஜ கிளிநொச்சி) நேற்று வீரமரணம் அடைந்துவிட்டார். [ஒ]

## வவுனியா பகுதியில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

வவுனியா மாவட்டம் மகிழங்குளம், பூவரசங்குளம் பகுதிகளில் நேற்றுக் காலை 3 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

குண்டு வீச்சினால் பொது மக்களின் உடைமைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. (ஒ)

## திருமலை இக்பால் நகரில் 6 பொது மக்கள் கொலை

திருகோணமலை இக்பால் நகரில் நேற்று முன்தினம் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது இனந் தெரியாத ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் அந்த வாகனத்தில் பயணம் செய்த ஆறு பேரும் கொல்லப்பட்டனர்.

கும்புறுப்பிட்டியில் உள்ள ''டொச்சவெல'' ஜேர்மன் வானொலி நிலையத்துக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த வாகனம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

வாகனம் மீது கிளைமோர் மற்றும் துப்பாக்கி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-த]

## தீவுப்பகுதி அகதிகளுக்கு 2 வார நிவாரணம் மட்டுமே!

''தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு இரண்டு வாரம் மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்க வேண்டும்.''

இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம், யாழ். அரச அதிபருக்கு நேற்று பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து கடந்த 18 ஆம் திகதி முதல் இரண்டு வார காலத்துக்குரிய நிவாரணமே தீவுப்பகுதி அகதிகளுக்கு வழங்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (உ-3)

## விடுதலைப் புலிகள் அமைப்பு போர்த்திறன் வாய்ந்தது!

### பி. பி. ஸி. விமர்சனம்

லண்டன், அக். 26

''உலகில் உள்ள விடுதலை அமைப்புகள் அனைத்திலும் —

போர்த்திறன் வாய்ந்த — முழுமையாக விடுதலைப் போராட்டத்திற்காக அர்ப்பணித்துக்கொண்ட — அமைப்பாக இருப்பது விடுதலைப் புலிகள் இயக்கமே.''

— இவ்வாறு பி. பி. ஸி. தனது விமர்சனத்தில் தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நெருப்புக் காய்ச்சல் பரவும் நிலை

யாழ்ப்பாணம், அக். 26

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளர்களில் பெரும் பகுதியினர் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களாக இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

தண்ணீரைக் கொதிக்க வைத்து அருந்துமாறு மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். (அ-15)

## ஓமந்தையில் படை அணியாம்!

லண்டன், அக். 26

வவுனியாவிலிருந்து புறப்பட்ட ஸ்ரீலங்கா அரசபடை அணி ஒன்று ஓமந்தையைச் சென்றடைந்திருப்பதாக கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி பி பி ஸி நேற்றிரவு தெரிவித்தது.

ஆனால் சுயாதீன செய்தி வட்டாரங்களில் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (உ-த)

### முச்சந்தி முரளி



அப்பா... இவங்க மக்கள் இரண்டு வாரத்திலை திரும்பிப் போகலாம் போலை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் பாசலைத் தோட்டத்துக்குரிய விதைகள், கன்றுகள் விற்பனைக்கு ஏராளமாக உண்டு. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். (18541)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, செவ்வாய்க் குற்றமுள்ள [13 பாவம்] வெளிநாட்டில் வேலை செய்யும் 30 வயது B Sc சிவில் எஞ்ஜினியருக்கு மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [18540]

### A/L கணக்கியல் புத்தகம்

"கணக்கியல் கொள்கைகளும், கணக்கீட்டு நியமங்களும்" வெளிவந்துவிட்டது; பிரசுர இலாப நட்டக் கணக்கு, ஐந்தொகை என்பனவற்றில் காண்பிக்கப்பட வேண்டிய விடயங்கள், கணக்கீட்டு நியமங்கள், கணக்கீட்டு விகிதங்கள், நிதிப்பாய்ச்சல் கூற்று, சிறு குறிப்புகள். ஆசிரியர்: விரிவுரையாளர், பா. பாலச்சந்திரன் 165 பக்கம் விலை 65/-. [18379)

### அம்பாள் திருமண சேவை

28 வயது B.A. (Hons விரிவுரையாளர் மணமகனுக்கு பட்டதாரி அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மணப்பெண் தேவை. ஞாயிற்றுக்கிழமையில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முற்பணம் ரூபா 50/- சிவன் சுவாமிக் குருக்கள் சண்முக ஐயர். வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [18150]

### நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் தேவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (4326]

### சனிமாற்றம்

28 10-91 மீண்டும் சனி மாற்றம் ரூபா 7/-. எங்கும் விற்பனையாகின்றது. ரகுநாதையர் வாக்கியப் பஞ்சாங்கப்படி தனுராசியிலிருந்து தன்சொந்த இராசி மகரத்திற்கு வக்கிரமடைந்த சனி திரும்பவும் மாற்றமடைகிறது. ரகுநாதன் பதிப்பகம் யாழ்ப்பாணம். (18148

### இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, ஆகிய இடங்களில் இயங்கி வந்த "பாக்கியம் குழந்தைகள் வைத்திய சாலை" இருபாலைச் சந்திக்கு அருகாமையிலுள்ள "குமரபுரம்" இல்லத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (18534)

புங்குடுதீவில் இயங்கிவந்த "இரட்ணம் வைத்திய சாலை" சகல வசதிகளுடன் இல. 129, ஸ்ரேசன் றோட் (புகையிரத நிலையம் முன்பாக) யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து சேவையாற்றுகிறது: தீவகத்தில் வழங்கப்பட்ட சிறந்த வைத்திய சேவை தொடர்ந்து வழங்கப்படும். (18531)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் – ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் [சி/0687]

### விண்ணப்பப் படிவம்

கணிதவிஞ்ஞான பயிலுநர் ஆசிரியர், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குண்டு. அருண் அச்சகம் (ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமையில்) 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/853)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 – 8 – 1940

உதிர்வு: 26 – 10 – 1987

### அமரர் யோசப் அலெக்சாண்டர் (துரை)

சொல்லாமலே நீ போனதுமேன்
சென்று வந்ததாலோ
கலையாய் எமக்கு நின்ற உன்னை
காலன் வந்து போயினனோ
ஆண்டுகள் நான்கு ஆன்றாலும்
அழிவில்லை அலெக்சாண்டா
உன் நினைவு.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கண்டுக்குளி புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6-00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் வாடும்;
தாய், தந்தை, சகோதரர்கள்,
சகோதரிகள், பிள்ளைகள் [ஜஸ்மின்,
அன்பழகன், மதியழகன்] மருமகன்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்மார்,
மைத்துனிமார், பெறாமக்கள்,
மருமக்கள்.

77A கோவில் வீதி,
யாழ்ப்பாணம் [18508]

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
### கமலாதேவி தம்பிராசா

அளவெட்டி வடக்கு மகளிர் ஐக்கிய நாணய சங்கத்தின் அங்கத்தவராக இருந்து 24-10 1991) சிவப்பேறெய்திய திருமதி கமலதேவி தம்பிராசா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், அன்னாரது குடும்பத்திற்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

அளவெட்டி வடக்கு மகளிர்-
ஐக்கிய நாணய சங்கம்.

அளவெட்டி. (18546)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
### சறோஜினிதேவி (ராணி) நற்குணம்

ஜனனம்: 23 - 10 - 1941

மறைவு: 26 - 09 - 19[illegible]1

வள்ளுவன் வகுத்திட்ட வாழ்க்கைத் துணைநலம்
வார்த்தைக்கு வார்த்தை வழ்ந்து காட்டி,
தன்னை மறந்துதன் சேய்களைக் காத்திடும்
தாய்மை இலக்கணஞ் செவ்வித் தொடுத்து,
வெள்ளை யுள்ளத்தொடு சுற்றந் தழுவியே
வேற்றுமை யற்ற நல் வாழ்வு நடத்தி,
நலவள் நம் சறோஜினிதேவி ஈசனார்
நிழலை யுற்றனள் சாந்தி! சாந்தி!

25-10-1991 அன்று அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை கொழும்பு முகத்துவார ஆலயத்தில் நடைபெற்றது. 26-10-1991 ஆகிய இன்று அன்னாரின் கொழும்பு வசிப்பிடத்தில் புண்ணியதானமும், பம்பலப்பிட்டி Prasad Rest Hall இல் சபிண்டீகரணமும் நடைபெறும் இவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குல தெய்வத்தின் மறைவினையிட்டு பல்வேறு வழி வில் உதவிகளும், ஆறுதலும் தந்த எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும், கடமைப்பாட்டையும் நல்கி நிற்கிறோம்.

பிரிவால் வாடும்

அன்புக் கணவர் (நற்குணம்),
பிள்ளைகள், மருமக்கள் பேரன்,
உற்றார், உறவினர்கள்.

பெரியபாதி, வதிரி,
சரவெட்டி. [18543]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 15 – 08 – 1922

மறைவு: 26 – 09 – 1991

### அமரர் க. இளையகுட்டி

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் - ஆனையிறவு)

எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

மகன் – ஜெகநாதன்,
மருமகள் – இந்திராணி,
பேரப்பிள்ளைகள் – ஜெகந்திரா, பிரசன்னா, திலீபன்.

"ஜெகந்திரா இல்லம்",
அம்பாமலை,
வல்வெட்டித்துறை. [18536]

வீரமரணம் அடைந்த
## முதல் பெண் போராளியின் நினைவு தினக் கூட்டம்

கோப்பாய், அக். 25

1987 அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இந்திய இராணுவத்துடனான மோதலில் கோப்பாய் கைதடிச் சந்தியில் வீரமரணம் அடைந்த முதலாவது பெண் போராளியான மன்னாரைச் சேர்ந்த இரண்டாவது லெப்டினன்ட் மாலதியின் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி வடகோவை சித்திரவேலாயுத சுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி, அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திருமாறன், யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதற்கு முன் கோப்பாய் கைதடி வீதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தை விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா திறந்து வைத்தார். [த-72]

## நீதிமன்றத்தில் முருகன் மனுத்தாக்கல்

சென்னை, அக். 26

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முருகன் தன்னிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 10 ஆயிரத்து 410 ரூபாவை திருப்பித் தருமாறு கோரி நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். [[illegible]]

ஆத்மீக தாகம் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

## எழுப்புதல் கூட்டங்கள்

இடம் : பரி பேதுரு ஆலயம் [றிமர் மண்டபம்]
காலம் : அக்- 25, 26
நேரம் : மாலை 4 00 மணி
செய்தி : வண. ஜே. விவேகனாதன்
[வடக்கு—கிழக்கு சபா சங்கத் தலைவர்]

[C/0852]

## ஈராண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகேஸ்வரி விஜயசிங்கம்

மலர்வு: 15 – 06 – 1940

உதிர்வு: 15 – 11 – 1989

திதி: 26 10 - 1991

எங்கள் இல்லத்தின் இணையில்லாத் தலைவியாய் விளங்கி, மனையும் சுற்றமும் பேணிக் காத்து, பாசமுடன் எம்மையெல்லாம் அரவணைத்து, புவி மீது வாழும் வழி அமைத்து, அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து தோன்றாத் துணையாக எம் நினைவுகளில் என்றென்றும் வாழும் எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

166/3, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (18542)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தவிர்க்க முடியாதது

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மக்களுக்குச் சீராகக் கிடைப்பதற்கும், விலை ஏற்றத்தைத் தடுக்கவும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

யுத்தம் தொடங்கியதிலிருந்து, தமிழ்ப் பகுதிகளில் உணவுப் பொருள் விநியோகம் சீராக இல்லை. அதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. அரசாங்கம் போதிய உணவுப் பொருள்களை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பாமையால் அவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டமை ஒன்று. அதனை ஈடுசெய்யும் அளவுக்குத் தனியார் துறையினர் தாமும் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்க்க முடியாத அளவுக்குப் பல தடைகள் இருப்பது இரண்டாவது.

இதனால் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கூட போதிய அளவு கிடைப்பதில்லை.

மக்களின் இந்தக் கஷ்டத்துக்கு பதுக்கலும், கொள்ளை லாபமும் மிகப் பெரும் பங்களிக்கின்றன. இராணுவ நடவடிக்கைகள், ஊரடங்கு, போக்குவரத்துக் கஷ்டங்கள், வழியில் சோதனைகளைச் சரிக்கட்ட வழங்கப்படும் 'சன்மானங்கள்' என்பனவற்றில் ஏதோ ஒரு காரணத்தைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கூறி, அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் இரக்க சிந்தனையின்றி அளவுக்கு அதிகமாக உயர்த்தப்படுகின்றன.

பொருள்களைக் கொண்டு வந்துசேர்த்தாலும், கொள்ளை லாபம் அடிப்பதற்காக அவை பதுக்கப்படுகின்றன. பதுக்கப்பட்டவை சாதகமான நேரகாலம் பார்த்து சந்தைக்கு விடப்படுகின்றன. அப்போது மக்கள் அதிகவிலை கொடுத்தே பொருள்களை வாங்கவேண்டி உள்ளது மொத்தத்தில்மக்கள் ''பணத்தைச் சாப்பிடும்'' நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்! பணம் இல்லாதவர்கள் அரைப்பட்டினியும் முழுப் பட்டினியும் கிடக்கிறார்கள்! இதுவே இன்றைய உண்மையான நிலை. இதற்கு அரசாங்கத்தினர் மட்டுமன்றி எம்மவர்களில் சிலரும் காரணர்கள்.

உணவுப் பொருள்களை அனுப்பும் தனது நிலைப்பாட்டில் சிறு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன, எனினும் போதியளவு உணவுப் பொருள்கள் வந்து சேர்ந்த பின்னர் தான், அதனைக் கருத்தில் — கணக்கில் — எடுக்க முடியும்.

அதற்கு முன் இன்றைய நெருக்கடி மிகுந்த வேளையில், உணவுப் பொருள் விநியோகம் சீர் செய்யப்படுவதற்கு உள்ளூர் மட்டத்தில் உகந்த திட்டம் ஒன்று மிகவும் அவசியம். அரசாங்க அதிகாரிகளும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும் சேர்ந்து நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கும் உணவுப் பொருள் விநியோக விசேட ஏற்பாடுகளை அதற்கான முற்படியாகக் கருதலாம். மக்களுக்குச் சிறிதளவு ஆறுதலைத் தரும் என்று நம்பலாம்.

நெருக்கடி மிகுந்த வேளையில் சாதாரணகாலம்போன்று அரசாங்கமும், தனியார் துறையும் போட்டி போட்டுக் கொண்டு சுதந்திரமாக வர்த்தகம் செய்வதற்கு எதிர்பார்க்க முடியாது. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் என்றும் சிந்திக்காது, கொள்ளை லாபம், பதுக்கலைக் கைக்கொள்ளும் தனியார் வர்த்தகத்துறை சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே ஆக வேண்டும். மக்கள் நலன் நாடி தவிர்க்க முடியாதது.

## வதந்திக்கு வயோதிபர் பலி

குருநகர் அக். 26

வியாழக்கிழமை மாலை மணியம் தோட்டத்திலிருந்து பரவிய வதந்திக்கு உயோ திடீர் ஒருவர் பலியானார்.

வதந்தியைக் கேட்டுப் பீதியடைந்த 67 வயதான அவர் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் தஞ்சம் புகுவதற்கு ஓடினார்.

அவ்வாறு ஓடியவர் ஆலயத்தை அடைந்ததும் மூர்ச்சித்து வீழ்ந்து அங்கு மரணமானார். இவ்வாறு வதந்திக்குப் பலியானவர் பாஷையூர் முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த மத்தேயு பொன்னுலிங்கம் என்பவராவார். [அ-51]

## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், அக் 26

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க ''அ'' ''ட'' அட்டை உலர் உணவு விநியோகம், பண்ணை வீதியிலுள்ள சி. எஸ். கே. கட்டடத்தில் நடைபெறுகின்றது

பாவனையாளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும்—

தவறின் பொருள்கள் மீண்டும் வழங்கப்படமாட்டா என்றும் சங்க வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது. (ஒ)

## அகதிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், அக் 26

யாழ் அடைக்கல மாதா தேவாலயத்தில் தங்கியிருந்த — தீவுப்பகுதியைச் சேர்ந்த — 646 அகதிகள் நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரி அகதி முகாமுக்கு மாற்றப்பட்டனர். அதைத் தொடர்ந்து தேவாலய முகாம் நேற்று மூடப்பட்டது. (உ-8)

## தீபாவளியை முன்னிட்டு இன்றும் நாளையும் கடைகள் திறப்பு

யாழ்ப்பாணம், அக். 26

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்றும், நாளையும் (சனி, ஞாயிறு) யாழ் நகரில் சகல வர்த்தக நிலையங்களும் முழு நாளும் திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அடுத்த வாரம் சனி ஞாயிறும் கடைகள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-15)

## ஜி. சீ. ஈ. கர்நாடக சங்கீத பரத நாட்டிய பரீட்சைகள்

யாழ்ப்பாணம், அக். 26

1989 டிசெம்பர் ஜி. சீ. ஈ. [சாதாரண தர] பரீட்சையில் கர்நாடக சங்கீத, பரத நாட்டிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்படவுள்ளதாக வலயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகளை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பாடசாலை அதிபர்கள், கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இதே சமயம்—

தனிப்பட்ட விண்ணப்பதாரரின் அனுமதி அட்டைகள் இதுவரை வந்து சேரவில்லை என்றும். அவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை வேறொரு திகதியில் நடைபெறும் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார் [ஓ]

## பிரதமர் நரசிம்மராவ் தமிழகத்தில்

சென்னை அக். 26

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நேற்று தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தார்.

ராஜீவ் காந்தி கொலையுண்ட ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று அஞ்சலி செலுத்திய நரசிம்மராவ் பின்னர் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

''ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்த குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். இன்னும் தப்பி இருப்பவர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்படுவார்கள்'' என்று அவர் சொன்னார்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அங்கு பேசுகையில்—

''ராஜீவ் காந்தியின் படுகொலைக்குக் காரணமான உள்நாட்டு சக்திகளை பொது வாழ்க்கையிலிருந்து விரட்டவேண்டும்'' என்றார். (உ-த)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், அக். 26

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு என் நடத்தும் பயிற்சி வகுப்புகள் நாளை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். இந்த வகுப்புகள் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும். [உ]

## மனைப் பொருளியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக 26

பயிற்றப்படாத மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு தொடர்ந்து 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ]

# தனியாக இயங்குவதற்கு 5 எதிர்க்கட்சிகள் விருப்பம்

## சபாநாயகருடன் வியாழன் சந்திப்பு

கொழும்பு, அக். 26

நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சிகளுக்குள் ஒரு தனியான சுதந்திரக் குழுவாகத் தம்மை அங்கீகரிக்கும்படி ஐந்து எதிர்க் கட்சிகள் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈரோஸ், ஈ. என். டி. எல். எவ் ஆகியனவே இந்த ஐந்து கட்சிகளும் ஆகும்.

இந்த ஐந்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவியாழன் காலை சபாநாயகரை அவரது அலுவலகத்தில் சந்தித்தது

எதிர்க்கட்சிப் பிரதமகொறடாவின் தலைமையில் தாம் தொடர்ந்து இயங்கப்போவதில்லை என்றும் தனியான ஒரு சுதந்திரக் குழுவாகத் தம்மை அங்கீகரிக்கும்படியும் இக்குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

விவாதங்களின் போது தமது கருத்துக்களைக் கூறுவதற்காக ஆகக்குறைந்தது மூன்று மணித்தியாலம் ஒதுக்கும் படியும் இவர்கள் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டனர்.

வியாழன் காலை சபாநாயகரைச் சந்தித்த இக்குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த எம். எச். எம். அஷ்ரப், எச். எம். அபூபக்கர், எம். எச். புஹார்தீன், எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மாவை சேனாதிராஜா, பி. ஜோசப், ரெலோவைச் சேர்ந்த ஜி. கருணாகரன், ஜே. திவ்வியநாதன் ஈரோஸைச் சேர்ந்த டலீர் சேகுதாவூத், எம். ஏ. அபூ, ஈ. என். டி. எல். எவ்வைச் சேர்ந்த கே. ஸ்ரீநிவாசன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். [த]

## உணவுப் பங்கீட்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தடுக்கு முகமாகவே உணவு விநியோகம் சீராக நடைபெற புதிய பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

### பல மாதங்களுக்கு போதுமானவை

இங்குள்ள உணவுப் பொருள்கள் பல மாதங்களுக்குப் போதுமானவை. எனினும் பதுக்கல்காரர்களின் நடவடிக்கைகளால் சாதாரண பொது மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெறமுடியாது துன்பம் அடைகிறார்கள்.

உதாரணமாக தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கை தொடங்கிய தினத்தில் ஒரு மூடை சீனி 1 550 ரூபாவாக விற்கப்பட்டது ஆனால் இன்று அதன் விலை 2 150 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தனைக்கும் தீவுப் பகுதி இராணுவ நடவடிக்கை தொடங்கிய பின்னர் உணவுப் பொருள் எதுவும் குடாநாட்டிற்குள் வரவில்லை. சீனியைப் புதிதாக எவரும் கொள்வனவு செய்யவும் இல்லை. விலை ஏற்றத்திற்கு கொள்ளை இலாப நோக்கத்துடனான பதுக்கலே காரணமாகும்.

### வதந்தி

இவ்வாறு தாம் விலைகளை ஏற்றிவிட்டு, இயக்கத்திற்குப் பொருள்களைக் கொடுத்ததால் தான் விலை உயர்த்த வேண்டி ஏற்பட்டதாகச் சிலர் வதந்திகளைப் பரப்புகிறார்கள்.

மக்களைப் பாதிக்கும் இந்நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே புதிதாக அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத் திட்டத்தை கொண்டுவந்துள்ளோம் இதனால் சிலருக்குச் சிரமங்கள் ஏற்பட்டாலும் பெரும் பகுதி மக்கள் பயனடைகிறார்கள்.

### ஒத்துழைப்புத் தருக!

இதன் அடிப்படையில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் இயங்கும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவினர் மேற்கொள்ளும் உணவுப் பொருள் விநியோகத் திட்டம் சீராக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

### விவசாயிகளுக்கு

இந்த நெருக்கடியான நிலையில் விவசாயிகளுக்கும் சில வேண்டுகோள்களை விடுக்கிறோம்.

அவர்களைத் தங்களிடம் உள்ள விதை தானியம், எரிபொருள் மேலதிகமாகவுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்கள் போன்றவற்றின் விவரங்களை அவ்வப்பகுதி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பாவனையாளர் பாதுகாப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்

விவசாயிகளே! உங்களுடைய பொருள்களைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறு செய்யுமாறு கேட்கின்றோம் இவ்வாறு அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. [அ]

## கம்போடிய ஒப்பந்தம் கைச்சாத்து

பாரிஸ், அக். 26

13 வருட கால யுத்தத்தின் பின்னர் கம்போடியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் ஒப்பந்தம் ஒன்றில் 19 நாடுகளின் பிரதிநிதிகளும் சண்டையில் ஈடுபட்டு வந்த ஆயுதக் குழுக்களின் தலைவர்களும் கைச்சாத்திட்டனர். பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் நேற்று முன்தினம் இந்த வைபவம் இடம்பெற்றது. [இ-த]

## உணவுப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக அறிய வந்தது

இந்தச் செய்திக்கு, வானொலி மூலம் நேற்றே பதில் செய்தி அனுப்பிய அரச அதிபர் —

தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். செயலகத்தின் பிரதம கணக்காளர், கொழும்பில் உணவுப் பொருள்களைப் பொறுப்பேற்பார் என்று தமது செய்தியில் குறிப்பிட்டிருப்பதாகவும் தெரியவந்தது (உ-3)

## மொத்த..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பொருள்களை இடம்மாற்றுவதற்கும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவிடம் நீங்கள் அனுமதி பெற வேண்டும் அனுமதி இல்லாமல் இத்தகைய பொருள்களை கொண்டு சென்றால் அவை பதுக்கல் பொருள்களாகக் கருதப்படும்.

பொதுமக்களின் நன்மை கருதி எடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளால் சம்பந்தப்பட்டோருக்கு ஏற்படும் சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறோம்— இவ்வாறு அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரிவினைவாதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி

## சென்னை பொலீஸ் அதிகாரி தகவல்

பிரிவினைவாதிகளான பத்து இந்திய இளைஞர்கள் கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு விடுதலைப் புலிகளினால் ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னையில் உயர்தர பொலீஸ் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

கடந்த திங்கட்கிழமை விடுதலைப் புலிகள் ஆதரவாளரான ஹீரா, சார்ள்ஸ் என்ற இந்தியர் திண்டுக்கலில் கைது செய்யப்பட்டிருந்ததை அடுத்து இந்த விவரம் வெளியாகியதாக பிரஸ்தாப பொலீஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட 10 இளைஞர்களும் கடந்த ஜனவரி மாதம் இந்தியா திரும்பினர் என்றும் —

ராஜீவ் காந்தி படுகொலை விடுதலைப் புலிகள் மீதான கடும் நடவடிக்கை ஆகியவற்றால் அவர்களின் திட்டங்கள் பிசுபிசுத்து விட்டன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-த)

# வெற்று பெற்றோல் தாங்கியில் ஒளித்து சிவராசன் பெங்களூர் தப்பினார்

சென்னை, அக். 26

ராஜீவ் காந்தி கொலையின் சூத்திரதாரி எனக் கருதப்படும் சிவராசன், கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் சென்னையிலிருந்து பெங்களூருக்குத் தப்பிச் செல்ல பெற்றோல் தாங்கி ஒன்றை பயன்படுத்தினார் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிவராசன் தனது சகாவான சுபாவுடனும், மெய்ப்பாதுகாவலர் நேருவுடனும், வெற்றுப் பெற்றோல் தாங்கி ஒன்றுக்குள் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் ஒளிந்திருந்து 6 மணி நேரம் பிரயாணம் செய்து பெங்களூருக்குத் தப்பிச் சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# வட இந்திய பூமிஅதிர்ச்சிக்கு அணைக்கட்டும் காரணம்?

புதுடில்லி, அக். 26

வட இந்தியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பூமி அதிர்ச்சிக்கு அப்பகுதியில் கட்டப்பட்டு வரும் ஓர் அணைக்கட்டும் காரணமாக இருக்கலாம் என்று இப்போது சந்தேகிக்கப்படுகிறது.

பகீரதி நதிக்குக் குறுக்காக உலக வங்கியின் உதவியுடன் இந்த அணைக்கட்டு கட்டப்பட்டு வருகிறது.

ஆற்றின் நீரோட்டம் தடைப்படுவதால் பெரும் ஆபத்து ஏற்படக் கூடும் என்றும் —

சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் என்றும் — முன்னர் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வாரம் உலகவங்கியின் நிபுணர் குழுவொன்று அணைக்கட்டு நிர்மாணம் பற்றி ஆராய இந்தியாவுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை —

இந்த அணைக்கட்டு நிர்மாண வேலையை உடனடியாக நிறுத்துமாறு மத்திய அரசிடம், உத்தரப்பிரதேச மாநில முதல்வர் திரு. கல்யாண் சிங் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். (த-10)

# மோதலில் சிக்கியவர் சடலம் வவுனியா ஆஸ்பத்திரிக்கு

## படையினர் அனுப்பினராம்

கொழும்பு, அக். 26

கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரியில் இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் சிக்கிக் காயமடைந்த பொதுமகன் ஒருவர் பளாலியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானாராம்.

இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க இத்தகவலைத் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இறந்தவரின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக படையினரால் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-த)

# யாழ். ரயில் பயணிகளிடம் கொள்ளையடித்தோர் கைது

கொழும்பு, அக். 26

யாழ். ரயில் பயணிகளிடம் கொள்ளையடித்து வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு ரயிலில் வரும் யாழ். பயணிகள் கோட்டை, மருதானை ரயில் நிலையங்களில் இறங்கும் போது அவர்களிடமிருந்து ரொக்கப்பணம் மற்றும் உடைமைகளை இவர்கள் கொள்ளையடித்து வந்தனராம்.

பாணந்துறைப் பொலீஸார் கடந்த செவ்வாயன்று இவர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் பாதுகாப்பாக தங்கியிருந்த வீடுகளின் சொந்தக்காரர்களும் கைது செய்யப்பட்டனர். (இ-த)

## மரண தண்டனை

யாழ்ப்பாணம், அக். 26

தமிழ் மண்ணில் இந்தியப் படையினர் இருந்த காலத்தில் தேச விரோத செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இருவருக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கணபதிப்பிள்ளை இராசதுரை, பரமலிங்கம் விக்னேஸ்வரன் ஆகியோரே இவ்விருவரும் ஆவர். (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாக். அணிக்கு ஷார்ஜா கிண்ணம்

ஷார்ஜா, அக். 26

ஷார்ஜா வெற்றிக் கிண்ணத்துக்கான மூன்று நாடுகளுக்கிடையில் ஷார்ஜாவில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

நேற்று இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை பாகிஸ்தான் அணி 72 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி வழங்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 262 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. [உ]

# இலங்கை தம்பதியர் கைது

புதுடில்லி, அக் 26

போலிப் பாஸ்போர்ட்டுகள் மூலம் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வந்த இலங்கையைச் சேர்ந்த தம்பதிகள் நேற்று முன்தினம் புதுடில்லியில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுடன் இருந்த 6 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். (இ-த)

# புதிய இறங்குதுறை அமைக்கப்படுகிறதாம்

யாழ்ப்பாணம், அக் 26

பூநகரிப் பக்கத்தில் நிலைகொண்டிருக்கும் படையினர் மண்டலாய்முனை, சங்குப்பிட்டி ஆகிய இடங்களில் தமது நிலைகளை வலுப்படுத்துவதோடு அங்கு இறங்குதுறை ஒன்றையும் அமைத்து வருவதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-த]

# மட்டுநகர் ஆஸ்பத்திரி தரம் உயர்த்த முயற்சி

கொழும்பு, அக். 26

மட்டக்களப்பு வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கும் படி சுகாதார அமைச்சை அரசாங்கம் பணித்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஒரு மருத்துவ பீடத்தை திறக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-த)

# ஈ.பி.ஆர்.எல்.எவ் வரவேற்பு

கொழும்பு, அக். 26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சர் தொண்டமானால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில் வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு மற்றும் காணி, பாதுகாப்பு, நிதி போன்றவற்றில் முழுமையான அதிகாரப் பரவலாக்கம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. இது வரவேற்கப்படவேண்டியது.

ஈ. பி. ஆர். எல். எவ். பொதுச் செயலாளர் திரு. பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

பி.பி.ஸி. "டெலிவிஷன்" குழு ஒன்று அண்மையில், யாழ்ப்பாணத்திற்கு வந்து விடுதலைப் புலிகளின் செயற்பாடு பற்றிய செய்திப்படம் ஒன்றை படம்பிடித்துச் சென்றிருந்தது. அது பற்றிய [illegible] வெளியிட்டது. (உ-த)

# கேரதீவில் கைவிடப்பட்ட வாகன விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 26

பூநகரிப் பிரதேசத்தில் இம்மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக கேரதீவுப் பகுதியில் கைவிடப்பட்ட வாகனங்களின் விவரங்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் திரட்டி வருகிறது.

கைவிடப்பட்ட வாகனங்களின் இலக்கங்கள், அவை பொருள்களுடன் நின்றனவா அல்லது வெறும் லொறிகளா, வாகனச் சாரதி மற்றும் உதவியாளர்கள் திரும்பிவிட்டனரா என்பன போன்ற விவரங்கள் சங்கத்தினரால் சேகரிக்கப்படுகின்றன.

வாகனங்களையும், அவர்களையும் மீட்பதற்கு உதவும் முயற்சியின் முதற் கட்டமாக இது அமைந்துள்ளது. [அ]

# திங்கள் முதல் பாடசாலைகள் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், அக். 26

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முறைப்படி சீராக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்விப் பணிப்பாளர் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அறிவித்துள்ளார்.

அதேசமயம் அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் தத்தமது கோத்தணி அதிபர்களுடனும், கோட்ட அலுவலகத்துடனும் இன்று தொடர்பு கொண்டு மாற்று ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். (ஓ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நீலாம்பாள் குமாரசாமிஐயர்

[புன்னாலைக் கட்டுவன்]

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி நீலாம்பாள் குமாரசாமிஐயர் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமாரசாமி ஐயர் [இளைப்பாறிய ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், பா. புவனேஸ்வரி அம்மா, ப. வாகீஸ்வரி அம்மா [ஆசிரியை யாழ் / இந்து மகளிர் கல்லூரி], சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோரின் அன்புத் தாயாரும் சோ. பாலகிருஷ்ணசர்மா [இ. போ. ச. கொண்டக்டர்], ஜெ. இராஜலட்சுமி அம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவில் தெற்கு, நுணாவிலில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:

சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்

நுணாவில் சந்தி.
(உப தபாற்கந்தோர் அருகாமை)
நுணாவில். (18403)

## பொன்னம்பலம் விசுவலிங்கம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த பொன்னம்பலம் விசுவலிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யோகம்மா, திலகவதி, உத்திரம், சந்தசாமி ஆகியோரின் அன்புத் தந்தையும், க. இராசரத்தினம், செ. இராசதுரை, க. தர்மகுலதேவியின் அன்பு மாமனாரும், நடராசா, இளையதம்பி, தணிகாசலம், காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற இரத்தினம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சு. சின்னத்துரை, க. ஐயாத்துரையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (26 - 10 - 1991) 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. இராசதுரை.
(மருமகன்)

கே. கே. எஸ். வீதி,
இணுவில். [18549]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org